www.tamilarangam.net

ஏ.ஜேம்
30.03.1982

# இராணுவ-பொலிஸ் விசாரணை பற்றிய அறிக்கை

என்னை 13.01.82 அன்று அதிகாலை இரண்டு மணியளவில் A.J கூரைத்தகடு உற்பத்தித் திட்டத்தில் வைத்து இராணுவத்தினர் கைது செய்தனர். என்னுடன் தோழர் சண், காணி உரிமையாளர் மகாகணபதி (மகான்) இருவரும் அங்கு தங்கியிருந்தனராயினும், வயலுக்கு நீர் பாய்ச்சும் ~~ஆதாரம்~~ பார்க்க அவர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் வெளியே சென்றிருந்தனர். இராணுவத்தினர் என்னைக் கைது செய்த போது பல கேள்விகளைக் கேட்டு நையப்புடைத்தார்கள். மற்றவர்களெல்லாம் ஓடி ஒளித்துவிட்டார்களா? ஆயுதங்கள் எங்கே? ஒரு ஆயுதத்தைக் காட்டி இது பழகுகின்றனீர்களா? படுத்திருந்த பாய் சூட்டுடன் இருக்கின்றது. எங்கே ஆட்கள்? என்றெல்லாம் கேட்டார்கள். நிரஞ்சன் தான் மனேஜர் என்றும் அவர் கொழும்பு சென்றுவிட்டதாகவும், தற்போது நான் மட்டுந்தான் உள்ளேன். படுத்திருந்த வேளாண்மைக் காரர் வயலுக்குப் போயிருப்பார்கள் என்று தெரிவித்தேன். தோழர் சண், மகான் இருவரையும் காணாததால் அவர்கள் ஓடி இருக்கலாம் என எண்ணியே இருந்தேன். காலை 6 மணி வரையிலும் அந்த வீடு முழுவதும் பலத்த சோதனைக்குள்ளாக்கினார்கள். அங்கிருந்து தாக்கம் 13 வது இதழ் 200 பிரதிகள் வரை கொண்ட பார்சல், பழைய தாக்கங்களில் ஒவ்வொரு பிரதிகள், தோழர் கிருபாவின் இரண்டு கடிதங்கள், இத் திட்டம் பதிவு செய்யப்பட்டதான பாப்புகளும், விபரங்களும் எடுத்துக் கொண்டார்கள். காலை ஆறு மணியளவில் என்னை வெளியே கூட்டி வந்தார்கள். வழியில் ஜீப் வண்டிக் கருகில் இரு இராணுவத்தினரும் தோழர் சண், மகான் ஆகிய இருவரும் நின்றனர். என்னைக் கூட்டிக் கொண்டு வந்த இராணுவத்தினரின் அதிகாரி, தோழர் சண்ணிடம் நீர் யார்? எனக் கேட்க, நான் தான் இதற்கு மனேஜர் எனவும், தனது பெயர் சண்முகநாதன் என்றும் கூறினர். இராணுவ அதிகாரி என்னிடம் ஏன் பொய் சொன்னாய்? என்று அடித்தார். அதற்கு தோழர் சண், நானும் நிரஞ்சனும் தான் பங்காளர் எனவும் அவர் கொழும்பு சென்றுள்ளார் எனவும் தெரிவித்தார். பத்திரிகை எப்படி வந்தது என தோழர் சண்ணிடம் அந்த அதிகாரி கேட்டார். தான் ஒரு ஏஜென்சி எனவும் 5 சதம் கமிஷன் கிடைக்கின்றது எனவும் கூறினர். யார் பத்திரிகை வெளியிடுவது? எங்கிருந்து அச்சிடப்படுகின்றது? என்று கேட்க பத்திரிகையிலுள்ள விலாசத்தைக் காட்டியும், பதிவு செய்யப்பட்டதைக் காட்டியும் தோழர் சண் பதிலளித்தார். மகான், தான் தான் காணி உரிமையாளர் எனவும் தற்போது வேளாண்மை பார்க்க வந்தனன் எனவும் கூறினர். தோழர் சண்ணையும், மகானையும் இங்கே நிற்கும் படியும் இவரை விசாரித்து விட்டு அனுப்புகின்றோம் எனவும் கூறி என்னை மறுபக்கம் நின்ற வீதிக்கு அழைத்து வந்து வண்டியின் மேல் மட்டக்களப்பு இராணுவ முகாமுக்குக் கொண்டு சென்றார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மட்டக்களப்பு ஆராணுவ முகாமில் வைத்து (தற்காலிகமாக ம.த/முற்றவெளியில் அமைக்கப்பட்டுள்ள) விசாரணை செய்தார்கள்.

நீ எங்கு இருக்கிறாய்? யாழ்ப்பாணம்.

இங்கு ஏன் வந்தாய்? சீற் கம்பனியில் வேலை செய்ய வந்தேன்.

உங்களில் எத்தனை பேர் வேலை செய்கிறார்கள்? சண் மனேஜர், நிரஞ்சன் மனேஜர், கேதீஸ் ஆகியோர். (தர்க்கீகம் 14வது இருந்த பார்சல் மேலுறையில் கேதீஸ் ஏறாவூர் என்ற விலாசம் இருந்ததை AJவ் இருந்து எடுத்து வைத்திருந்தார்கள்)

சண் மனேஜர் எவ்விடம் இருப்பவர்? யாழ்ப்பாணம்.

நிரஞ்சன் மனேஜர் எவ்விடம் இருப்பவர்? யாழ்ப்பாணம்.

கேதீஸ் எங்கு இருக்கிறவர்? மட்டக்களப்பு

சண் மனேஜரின் வீடு உனக்குத் தெரியுமா? ஆம்.

விலாசம் என்ன? திருநெல்வேலி, கம்பஸ் லேன்.

நிரஞ்சனின் விலாசம் என்ன? யாழ்ப்பாணம். ஆனால் எங்கு இருப்பவர் எனத் தெரியாது.

கேதீசின் விலாசம் என்ன? செங்கலடி. வீட்டு விலாசமோ தெரியாது.

கிருபாகரன் என்பவர் யார்? எனக்கு அவரைப் பற்றித் தெரியாது.

அன்னலிங்கம் என்பவர் யார்? அவரையும் எனக்குத் தெரியாது.

சீற் கம்பனியில் நீங்கள் நான்கு பேர் மட்டுமோ வேலை செய்வது? ஆம்.

மனேஜர் மார் வேலை செய்பவர்களா? ஆம்.

நீங்கள் செய்கிற சீற்றிற்கு என்னென்ன சேர்க்கிறனீர்கள்? சீற் செய்யும் விபரத்தை விளக்கிக் கூறினேன்.

அங்கு வேறு யாரும் வருவதில்லையா? எங்களிடம் சீற் விலைக்கு வாங்க வருவினம் போவினம். அதை விட வேறு யாரும் வருவதில்லை.

ஒரு சீற் என்ன விலைக்கு விற்கிறீர்கள்? 40 ரூபாவுக்கு.

ஒரு சீமெந்து பைக்கற்றுக்கு எத்தனை சீற் செய்கிறனீர்கள்? 4 சீற் என்றேன்.

அன்று எத்தனை பேர் படுத்திருந்தீர்கள்? நானும், சண், மகாகணபதி, வேளாண்மை பார்க்கின்ற இவரும் என்றேன்.

உங்கள் நான்கு பேருக்கு ஏன் ஏழு பாயும் ஏழு தலையணையும்? எங்களுடையதும் வேளாண்மைக் காரருடையதும்.

நான்கு பேருக்கு ஏன் ஏழு பிறஸ் (BRUSH)? பாவித்த பழையதுகளும் சேர்ந்து உள்ளது என்றேன்.

தர்க்கீகம் எங்கிருந்து வருவது? யார் வெளியிடுவது? எப்படி அனுப்பப்படுவது? உங்கள் இடத்திற்கு எப்படி வருகிறது? தர்க்கீகம் யாழ் வளாகத்திலிருந்து வெளியிடுகின்றார்கள். விக்னேஸ்வரன் தான் பொறுப்பாளர். புகையிரதத்தில் கேதீஸுக்கு வரும். அவர்தான் இங்கு கொண்டு வருவார்.

விக்னேஸ்வரனைத் தெரியுமா? அவரைத் தெரியாது.

பத்திரிகையை என்ன செய்கிறனீர்கள்? விற்பனை செய்பவர்கள். ஆனால் எப்படிச் செய்வது என்பது எனக்குத் தெரியாது. கடைகளில் கொடுக்கிறார்களோ தெரியாது.

நீ பத்திரிகை விற்கப் போவதில்லையா? நான் போவதில்லை.

நீ என்ன கிழந்தையா? ஒரு இடமும் போவதில்லையா? நான் வேறு ஒரு வேலையும் செய்வதில்லை. சீற் மட்டும் தான் செய்கின்றேன்.

இத்தனை விசாரணைகளின் போது பல முறை அடித்தார்கள். உதைத்தார்கள். பலர் வந்து மாறி மாறி அடித்தார்கள். அன்று முழுவதும் நீரோ சாப்பாடோ எதுவும் இல்லை. நீர் கேட்டதற்கு கூட அடித்தார்கள். என்னை வைத்திருந்த அறையினூடாக போய் வருபவர்களெல்லாம் "கொட்டியா" என்று காலால் உதைவார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

[illegible]

டம் ஒப்படைத்தார்கள். பொலிசார் என்னிடம் இருந்து வாக்குமூலம் எடுத்தார்கள். அத்தோடு கைவிரல், கால்விரல் அடையாளங்களும் படங்களும் எடுத்தார்கள். பொலிசார் அன்றிரவு பொலிஸ் நிலையத்தில் வைத்திருந்து விட்டு மறுநாள் (14.03.82) மாலை 7½ மணியளவில் என்னை நீதவானிடம் (வீட்டிற்கு) அழைத்துச் சென்றார்கள். நீதவான் பொலிசாரிடம் ஏதோ பேசிவிட்டு 22ம் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவு போட்டார். அதன்படி றிமாண்டில் வைக்கப்பட்டேன். 22ம் திகதி என்னை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்தார்கள். அங்கு நீதவான் என்னை விடுதலை செய்தார். பின்னர் பொலிசார் என்னிடம் பொலிஸ் நிலையத்தில் கையெழுத்துப் போடும்படி கூறி வெளியே கூட்டி வந்தனர். வெளியில் இரகசிய பொலிசார் வாகனத்தில் வந்து நின்றனர். அவர்களிடம் என்னை ஒப்படைத்தனர். இரகசிய பொலிசார் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர். அங்கு எனது சகோதரர் நின்றார். பொலிஸ் இன்ஸ்பெக்டருடன் கதைத்து எங்கே கொண்டு போகிறீர்கள் எனக் கேட்ட போது, கொழும்பு 4ம் மாடிக்கு கொண்டு செல்வதாகவும் விசாரித்து விடுதலை செய்வதாகவும் தெரிவித்தனர். எனது சகோதரரிடம் எப்படி உனக்கு தெரியும் என இன்ஸ்பெக்டர் கேட்டார். கடிதம் கிடைத்ததாக பதிலளித்தார். வீட்டில் இருந்து கோபித்துக் கொண்டு தம்பி புறப்பட்டவன் எனக் கேட்க, இந்த வேலை செய்யவே வந்ததாக கூறுகிறீர். காசு ஒழுங்காக அனுப்புகிறவனா? இல்லையா? என்று கேட்டனர். அம்மாவுக்குத் தான் பணம் அனுப்புவதாகவும் கடிதங்கள் போடுவதாகவும் சகோதரர் பதிலளித்தார்.

பின்னர் அன்று மாலை என்னை ஜீப் வண்டியில் கொழும்பு கொண்டு சென்று 4ம் மாடிக்கு கூட்டிச் சென்றனர். மறுநாள் சி.ஐ.டி யினர் என்னை விசாரணை செய்தனர். மட்டக்களப்பு இராணுவ முகாமில் வைத்து இராணுவத்தினர் கேட்ட அத்தனை கேள்விகளையும் திரும்பத் திரும்பக் கேட்டார்கள். ஒரே மாதிரி பதிலளித்தேன். அத்துடன் வேறு கேள்விகளும் கேட்டார்கள்.

நிரஞ்சனை நீ சொல்லுமட்டும் உன்னை விடமாட்டோம் எனக் கூறி அடித்தார்கள். எனக்கு அவர் வீடு எங்கே, இப்ப எங்கே நிற்கிறார் என்பது பற்றி எனக்குத் தெரியாது என்று கூறினேன்.

உனக்கு வேறு யாரைத் தெரியும்? சண் மனோகரை மட்டும் தான் எனக்குத் தெரியும்.

சண்ணை எப்படித் தெரியும்? முன்பு அம்மா ஐயாவுடன் கொக்குவிலில் இருக்கும் போது சுருட்டுத் தொழில் செய்தேன். சுருட்டுத் தொழிலை சண் மனோகர் வீட்டில் தான் செய்தேன். அப்போது தான் அவரைத் தெரியும்.

உன்னை யார் சீர் கம்பனிக்கு கூட்டி வந்தார்கள்? சண் மனோகர் தான் கூட்டி வந்தார்.

சீர் கம்பனி எப்போது ஆரம்பிக்கப்பட்டது? 81ம் ஆண்டு 5ம் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

அப்போது எத்தனை பேர் வந்தீர்கள்? நானும் சண் மனோகரும், நிரஞ்சன் மனோகரும் என்றேன்.

கேதீஸ்வரன் எப்போது வந்தான்? நாங்கள் வந்து இரண்டு கிழமைகளில் கேதீஸ் வந்ததாக கூறினேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கிருபாகரன் என்பவன் யார்? எனக்குத் தெரியாது. www.tamilarangam.net
இந்தக் கடிதங்களை எங்கிருந்து இராணுவத்தினர் எடுத்தனர்? மனோகர னுடைய மேசை லாச்சியில் இருந்து எடுத்தார்கள்.
உனக்கு இந்த கடிதங்களைப் பற்றித் தெரியாதா? அது அவர்களுடைய மேசைக்குள் இருந்தது. அதில் என்ன இருந்தது என்பது எனக்குத் தெரியாது.
தர்க்கீகம் பேப்பரை யார் அடிக்கிறது? அந்தப் பேப்பரில் இருக்கிறது சேர் என்றேன்.
அது எங்களுக்குத் தெரியும். அவருடைய பெயர் என்ன? விக்னேஸ்வரன் என்றேன்.
அவருடைய வீட்டுக்கு போயிருக்கிறீயா? எனக்கு அவரையோ அல்லது அவருடைய வீட்டையோ எனக்குத் தெரியாது.
கன்னட்டி பண்ணைக்கு போயிருக்கிறீயா? இல்லை. எனக்கு தெரியாது.
கென்ட், டொலர் பண்ணைகளுக்கு போயிருக்கிறீயா? இல்லை. தெரியாது.
உமாமகேஸ்வரனைத் தெரியுமா? தெரியாது.
குட்டிமணி, பிரபாகரன், நாகராசா போன்ற பலர் பெயர்களைக் கேட்டார்கள். தெரியாது என்றேன்.
கனுவாங்கிக் கிழக்கு போயிருக்கிறீயா? இல்லை.
இளங்கோவைத் தெரியுமா? தெரியாது.
ஈ.ரோஸ் என்ற இயக்கத்தைத் தெரியுமா? எனக்குத் தெரியாது.
தர்க்கீகம் நீ படிப்பதில்லையா? அது வாசிக்கிறது மிகவும் கஷ்டம் மேலோட்டமாக சில வேளைகளில் பார்ப்பேன்.
தர்க்கீகம் என்றால் என்ன? அதன் கருத்து எனக்கு விளங்கவில்லை.
தர்க்கீகம் பேப்பரை யார் கொண்டு வருவது? கேதீஸ்வரன்.
பேப்பரை என்ன செய்வீர்கள்? விற்பதாக கூறுவார்கள்.
கடையில் விற்பதா? அல்லது ஊரூராக விற்பதா? எப்படிச் செய்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது.
தேவானந்தன் என்பவரைத் தெரியுமா? தெரியாது.
இதற்கு முன் கொழும்பு வந்தனியா? இல்லை.
பாஸ் போட் எடுக்க வரவில்லையா? இல்லை.
உனக்கு பாஸ்போட் இருக்கா? இல்லை.
வெளிநாடு போயிருக்கிறீயா? இல்லை.
இந்தியாவிற்கு போனியா? இல்லை.
கொழும்பில் உறவினர்கள், நெருங்கியவர்கள் யாராவது இருக்கிறார்களா? இல்லை.

இப்படி திரும்பத் திரும்ப பல கேள்விகளை நாளுக்கு நாள் கேட்டார்கள். சித்திரவதை செய்தார்கள். இவ்வளவு விசாரணைகளின் போதும் உடுப்புகள் எதுவும் இல்லை. ஆண் குறியை மேசையில் வைத்து எஸ்லோன் பைப்பினால் இரத்தம் வர அடித்தார்கள். நகங்களுக்குள் ஊசி ஏற்றினார்கள். கால் பெருவிரல் இரண்டையும் கயிற்றினால் கட்டி தொங்கவிட்டு அடித்தார்கள். கால் கிதியல் அடித்தார்கள். இப்படி பல கஷ்டங்களை செய்தார்கள். இது 23/01/82 இல் 2/03/82 வரை நடைபெற்றது. பின்னர் விடுதலை செய்தனர்.

க. சைவான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்